பொருட்களுக்கு இனி 28 சதவீதம் வரி விதிக்கப்படும். ஆனால் தற்போது 26 சதவீத வரி விதிப்பு விதிக்கப்படும் பல பொருட்களின் மீதான வரி 18 சதவீதமாக குறையும். இந்த வரி விதிப்பு மாற்றத்தால் விலைவாசி குறையும்.

இவ்வாறு அவர் கூறினார்.

எல்லை தாண்டிய தாக்குதலில், கடந்த 5 வாரங்களில் மேற்கு எல்லைப் பகுதியில் மட்டும் மூன்றில் இரண்டு பங்கு தாக்குதலை நடத்தி உள்ளன. இந்த ஆண்டில் ஜம்முவில் மட்டும் 200 முறை அத்துமீறி தாக்குதல் நடத்தி உள்ளன.

பாகிஸ்தான் ராணுவம், பாகிஸ்தான் உளவு படை, பயங்கரவாதிகள் நடப்பது சுமாண்டோக்கள் மட்டத்தில் மட்டுமே. இந்திய படைகள் தாக்குதலை நிறுத்தியதும், பாகிஸ்தான் படைகள் மீண்டும் எல்லை தாண்டி தாக்குதலை தொடர்கின்றன. பாகிஸ்தான் தாக்குதலால் எல்லைப் பகுதியில் உள்ள 314 கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என தெரிவித்துள்ளனர்.

# பின் சட்ட வல்லுனராக இந்திய வக்கீல் தேர்வு



ஐந்து பகுதிகளாக பிரிக்கப்பட்டு முறையே ஆப்பிரிக்கா, ஆசியா–பசிபிக், கிழக்கு ஐரோப்பா, லத்தின் அமெரிக்கா,கரிபியன் மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளை சேர்ந்த பிரதிநிதிகளை நியமிக்க நடத்தப்பட்ட இந்த வாக்கெடுப்பில் ஆசியா பசிபிக் துணை கண்டத்தின் சார்பில் போட்டியிட்ட இந்திய வக்கீலான அனிருதா ராஜ்புத்(33) என்பவர் 160 வாக்குகளை பெற்று அபார வெற்றியைப் பெற்றுள்ளார்.

அவருக்கு அடுத்தபடியாக ஆசியா–பசிபிக் துணை கண்டத்தில் உள்ள நாடுகளின் சார்பில் போட்டியிட்ட ஜப்பானை சேர்ந்த வக்கீல் ஷின்யா முராசே 148 வாக்குகளையும், மூன்றாவது இடத்தில் வந்த சீன வக்கீல் ஹுய்காங் ஹுவாங் மற்றும் ஜோர்டான் வக்கீல் மஹ்மூத் டைபல்லா ஆகியோர் 146 வாக்குகளையும் பெற்றனர்.

கொரியா வக்கீல் கி கப் பார்க் 136 வாக்குகளும், கத்தார் வக்கீல் அலி பின் பெட்டாய்ஸ் அல்மர்ரி 128 வாக்குகளையும், வியட்நாம் வக்கீல் ஹாங் தாவ் குயென் 120 வாக்குகளையும் பெற்றுள்ளனர். சுவிட்சர்லாந்து நாட்டின் தலைநகரான ஜெனிவாவை தலைமையிடமாக கொண்டு செயல்படும் ஐக்கியநாடுகள் சபையின் சர்வதேச சட்ட கமிஷனின் புதிய உறுப்பினராக தேர்வாகியுள்ள இந்திய வக்கீல் அனிருதா ராஜ்புத் டெல்லி சுப்ரீம் கோர்ட்டில் வக்கீலாக ஆஜராகி வருகிறார்.

மத்திய அரசின் வெளியுறவுத்துறையிலும் சட்ட ஆலோசகராக இருந்துவரும் இவர் இந்தியாவின் இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக ஆய்வுசெய்ய மத்திய சட்ட கமிஷனால் நியமிக்கப்பட்டிருந்தார். சர்வதேச கடல்சார் சட்டம், சர்வதேச வர்த்தக சட்டம் தொடர்பாக பல ஆய்வு நூல்களையும் இவர் எழுதியுள்ளார்.

## ஈசாப் இந்தியா லிமிடெட்

ESAB

CIN:L29299TN1987PLC058738

பதிவு அலுவலகம் : பிளாட் எண் 13, 3வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை- 600 058.

தொ.பேசி எண். 044-4228 1100, இ-மெயில்: investor.relations@esab.co.in

**செப்டம்பர் 30, 2016 வரை முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்**

(ரூ. லட்சத்தில்)

| வ. எண் | விவரங்கள் | முடிவடைந்த காலாண்டு செப்டம்பர் 30, 2016 [தணிக்கை செய்யப்படாதது] | முடிவடைந்த காலாண்டு ஜூன் 30, 2016 [தணிக்கை செய்யப்படாதது] | முடிவடைந்த காலாண்டு செப்டம்பர் 30, 2015 [தணிக்கை செய்யப்படாதது] | முடிவடைந்த அரையாண்டு செப்டம்பர் 30, 2016 [தணிக்கை செய்யப்படாதது] | முடிவடைந்த அரையாண்டு செப்டம்பர் 30, 2015 [தணிக்கை செய்யப்படாதது] | முடிவடைந்த ஆண்டு மார்ச் 31, 2016 [தணிக்கை செய்யப்பட்டது] |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மொத்த செயல்பாடுகள் மூலம் வருமானம் (நிகர) | 13,234 | 12,718 | 12,806 | 25,952 | 24,772 | 49,497 |
| 2 | இக்காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரிக்கு முன், சாதாரண மற்றும் அசாதாரண இனங்கள்) | 1,434 | 1,245 | 1,168 | 2,679 | 2,307 | 4,463 |
| 3 | இக்காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்) (சாதாரணத்திற்கு பின் மற்றும் அசாதாரண இனங்கள்) | 1,434 | 1,245 | 884 | 2,679 | 2,023 | 4,110 |
| 4 | இக்காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் / (நஷ்டம்) (சாதாரணத்திற்கு பின் மற்றும் அசாதாரண இனங்கள்) | 998 | 862 | 619 | 1,860 | 1,400 | 2,834 |
| 5 | இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [இக்காலத்திற்கான வருமானம் உள்ளடக்கிய லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்)] | NA | NA | NA | NA | NA | NA |
| 6 | சமபங்கு மூலதனம் | 1,539 | 1,539 | 1,539 | 1,539 | 1,539 | 1,539 |
| 7 | கையிருப்புகள் (முந்தைய ஆண்டு கணக்கில் மறுமதிப்பீடு கையிருப்புகள் நீங்கலாக) | - | - | - | - | - | 30,015 |
| 8 | பங்கு விகித ஈட்டுத்தொகை (ஒவ்வொரு பங்கு ரூ 10/-) (அசாதாரண இனங்களுக்கு முன்) ) | - | | | | | |
| | அ) அடிப்படை | 6.48 | 5.60 | 4.02 | 12.08 | 9.10 | 18.41 |
| | ஆ) குறைமதிப்பு | 6.48 | 5.60 | 4.02 | 12.08 | 9.10 | 18.41 |

குறிப்பு : மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் தேர்ந்தெடுக்கப்பட்டவைகள் ஆகும். காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் கம்பெனியின் www.esabindia.com என்ற இணைய தளத்திலும், பங்கு வர்த்தக நிறுவனத்தின் BSE Limited மற்றும் NSE India Limited என்ற இணையதளத்திலும் காணலாம்.

ஈசாப் இந்தியா லிமிடெட்டுக்காக
ரோஹித் கம்பீர்
மேலாண்மை இயக்குனர்

Global solutions for local customers - everywhere
Visit our website : http://www.esabindia.com

சென்னை
3 நவம்பர், 2016